செ.வெ. எண். 277 **செய்தி வெளியீடு** Dat 26.03.10

கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளர்கள் நலவாரிய உறுப்பினர்கள் கூட்டம் 26.03.2010 அன்று மதியம் 03.30 மணியளவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களது தலைமையில் தலைமைச் செயலகத்தில் உள்ள மனிதவள மேம்பாடு கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளர்கள் நலவாரியத்தின் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களை வரவேற்று இந்நலவாரியத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டமைக்காக அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். இவ்வாரியத்திற்கு அரசு மானியமாக ரூ.50 இலட்சம் வழங்கி ஆணையிட்டுள்ளது. இவ்வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.02.2010 அன்று ஆய்வு செய்யப்பட்டு அதன் விளைவாக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை காரணமாக இதுவரை சுமார் 1000 விண்ணப்பங்கள் வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டு, இதுவரை 5000 விண்ணப்பங்கள் வரை விநியோகம் செய்யப்பட்டு, சுமார் 1000 விண்ணப்பங்கள் உறுப்பினர் சேர்க்கைக்காக மீளப்பெறப்பட்டுள்ளது. அவ்விண்ணப்பதாரர்களில் சுமார் 846 நபர்களுக்கு அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்வதால், உறுப்பினர்களாக பதிவு செய்து அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அடையாள அட்டை வழங்கப்பட்ட பிறகு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க இவ்வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை இவ்வாரிய உறுப்பினர்களுக்கு வழங்க விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளும் கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளர்கள், டாக்டர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை

26/3/10
செயலாளர்
தகவல் தொழில்நுட்பவியல் துறை.